

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.12.2023) கோயம்புத்தூர் மாவட்டத்தில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 1 – ஸ்ரீரங்கம் தேவி ஹாலில் மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாமை தொடங்கி வைத்து பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று முகாமை பார்வையிட்டார்கள். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், மாநகராட்சி மேயர் அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பழனியாண்டி, சி.கதிரவன், மாநகராட்சி ஆணையர் டாக்டர்.இரா.வைத்திநாதன், நகர பொறியாளர் சிவபாதம், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் க.வைரமணி, மாநகராட்சி அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# மேல்மலையனூரில் உணவு திருவிழா கண்காட்சி!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

செஞ்சி, டிச. 19-

விழுப்புரம் மாவட்டம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் மேல்மலையனூர் வட்டார அளவிலானசிறுதானியங்கள் மற்றும் பாரம்பரிய உணவுத் திருவிழா மற்றும் ரத்தசோகை இல்லாத கிராமம் குறித்துவிழிப்புணர்வு நிகழ்ச்சி மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வட்டார கல்வி குழு தலைவர் நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். வட்டார வளர்ச்சி அலுவலர்கள்குலோத்துங்கன், சரவணகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டார இயக்க மேலாளர் பிரபாவதி அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் சிறு பான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு வட்டார அளவிலான சிறு தானியங்கள் மற்றும் பாரம்பரிய உணவு திருவிழா கண்காட்சியினை தொடங்கி வைத்து பார்வையிட்டுசிறு தானியங்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளின் தரத்தை சாப்பிட்டு பார்த்தார்.

தொடர்ந்து காட்சிப்படுத்தப்பட்ட கண்காட்சியில் முதல் மூன்று இடங்களை பிடித்த மகளிர் சுய உதவி குழுவினருக்கு சான்றிதழை வழங்கி பாராட்டு தெரிவித்து சிறப்புரையாற்றினார்.

பாரம்பரிய உணவு திருவிழா நிகழ்ச்சியில் மேல்மலையனூர் வட்டாரத்தைச் சேர்ந்த 35 ஊராட்சிகளில் இருந்து 150க்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக் குழுவினர் கலந்து கொண்டு பாரம்பரிய உணவு வகைகளை காட்சிப்படுத்தினர்.

முன்னதாக அவலூர் பேட்டையில்நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் நகர செயலாளர் பிரபாகரனின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருஉருவ படத்தை அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்து ஆயிரம் நபர்களுக்கு அரிசி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார் .

நிகழ்ச்சியில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரபா சங்கர்,உதயகுமார், இளங்கோவன், கணக்கர் பாலமுருகன்,மகளிர் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்,நிர்வாகிகள் செல்வராஜ்,மாவட்ட கவுன்சிலர்கள் சாந்தி சுப்ரமணியன், செல்வி ராம சரவணன்,நட்ராஜ், அர்ஷத், செல்வம்,சரவணன், எஸ். பி. சம்பத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் அரியலூர் மாவட்டத்தில்

# 42 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

அரியலூர், டிச,19-

அரியலூர் மாவட்டம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட், ஜெயங்கொண்டம் கிளையில் ஒட்டுநர் மற்றும் நடத்துனர்களுக்கான குளிரூட்டப்பட்ட ஓய்வறையினை திறந்து வைத்து, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக கும்பகோணம் கோட்டத்தில் பணிக்காலத்தில் உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்கள் 42 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ம.ச.கலைவாணி ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ. க.கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

ஜெயங்கொண்டம் அரசு போக்குவரத்துக் கழக கிளையில் பணி நியமன ஆணைகளை வழங்கி தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.ச.சிவசங்கர் பேசியதாவது:-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றது முதல் அரசுப் பணியில் பணியாற்றி பணிக்காலத்தில் இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு பணி ஆணைகளை வழங்க வேண்டும் என உத்தரவிட்டு, பல்வேறு துறைகளில் பணிகாலத்தில் இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் அரசு போக்குவரத்து கழகத்தில் பணி காலத்தில் இறந்துவிட்ட பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு படிப்படியாக பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு வருகிறது. முன்னதாக தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக கும்பகோணம் கிளையில் 62 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. தற்போது நம்முடைய ஜெயங்கொண்டம் கிளையில் இன்றையதினம் 42 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 104 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமண ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தியுள்ள மகளிர் கட்டணமில்லா பேருந்து பயண திட்டத்தின் மூலம்தான் போக்குவரத்துத் துறை மீண்டும் உயர்ந்த நிலை அடைந்து வருகிறது. இத்திட்டத்தில் 40 சதவீதமாக இருந்த மகளிர் பேருந்து பயணம் தற்போது 60 சதவீததிற்கு மேல் எட்டியுள்ளது. இதற்கான பேருந்து கட்டணங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் உத்தரவிடபட்டு தமிழக அரசின் சார்பில் வழங்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக ரூ.2800 கோடி நிதியானது வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் போக்குவரத்து பணியாளர்களுக்கு மாதந்திர ஊதியம் முதல் தேதியில் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத்தின் காரணமாக பெண்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளதுடன், அவர்களின் பொருளாதார முன்னேற்றம் அடைந்துள்ளது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தினை மேலும் மேம்படுத்தும் வகையில் 1500 பேருந்துகள் பாடி கட்டும் பணிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டு, 400 பேருந்துகளின் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும், 2000 புதிய பேருந்துகள் வழங்க நிதியுதவி அளிக்கப்பட்டு 1666 பேருந்துகளுக்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இப்பேருந்துகள் வருகிற ஜனவரி மாதத்தில் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால் கொடியசைக்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் உள்ள மக்கள் பயன்பெறும் வகையில் செல்ல உள்ளது.

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசினார்.


இந்நிகழ்ச்சிகளில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் கும்பகோணம் கோட்டம் மேலாண் இயக்குனர் ஆர்.மோகன், திருச்சிராப்பள்ளி மண்டல பொது மேலாளர் எஸ். சக்திவேல், முதுநிலை துணை மேலாளர் கோவிந்தராஜ், பொது மேலாளர் நாசர், துணை மேலாளர்கள் சதீஷ் குமார், ரங்கராஜன், கார்த்திகேயன், ராமநாதன், ஜெயங்கொண்டம் கிளை மேலாளர் ராம்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், மாவட்ட துணை செயலாளர் மு.கணேசன், மாவட்ட பொருளாளர் கு. இராஜேந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர், இரா.மணிமாறன், பூ.செல்வராஜ், வா. சௌந்தரராஜன், ரெங்க.முருகன் நகர கழக செயலாளர் வெ.கொ. கருணாநிதி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயி கதிரவன், பொதுக்குழு உறுப்பினர் வி.எம்.ஷாஜ கான், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ். ஆர். இராமராஜன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் தங்க. ராமகிருஷ்ணன், மாவட்ட தகவல்தொடர்பு அணி அமைப்பாளர் குலோத்துங்கன், நகர கழக நிர்வாகிகள் ஞானபிரகாசம், எஸ். ராஜமாணிக்கம், மு.முரசொலிகுமார், பா.ரமேஷ், கொளஞ்சியப்பா, கு.பிரபாகரன், மா.செ.செந்தில்குமார், நகர இளைஞரணி அமைப்பாளர் ஆ.கரிகாலன், தொ.மு.ச. நிர்வாகிகள் டி. சேகர், பி.வி.அன்பழகன், கொளஞ்சி, இளங்கோவன்,செல்வம், பட்டுசெல்வம்,குமார், கணேசன், சுப்ரமணியன், இரவிச்சந்திரன், ஜெய்சங்கர்,சங்கர், விஜயன், குமரவேல், பாலா, ஸ்ரீராம்,

மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகள், அலுவலர்கள், பணியாளர்கள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.



புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழக சுற்றுச்சூழல் அணியின் மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் லப்போர்த் வீதியில் உள்ள திமுக தலைமை அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்திற்கு அணி அமைப்பாளர் முகிலன் தலைமை தாங்கினார். அணித் தலைவர் அரங்கபன்னீர்செல்வம், துணைத் தலைவர் நவீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் திமுக மாநில அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா அவர்கள் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி பேசினார்.இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# இனமான ஏந்தலவர்; என்றுமவர் வாழ்கவே!



பேராசிரியர்
**மா.செல்வராசன்**

ஆரிய மாயைதனை
அம்பலப் படுத்திய
பேரறிஞர் அண்ணா
பெரியாரின் வழிநின்று
சீரிய பகுத்தறிவு
சீர்திருத்தம், தன்மானம்
ஊரிலே,நாட்டிலே
ஒவ்வொரு மேடையிலே
பாரிலே உயர்ந்ததாம்
பைந்தமிழ் மொழியிலே
கூரிய சொல்லடுத்துக்
குத்தீட்டி, வில், வாள், வேல்
மாரியாய்ப் பொழிந்துபெரும்
மடமையுடன் அறியாமை
வேரறுத்துக் கொள்கைகள்
விளக்கிய இனமானப்
பேராசிரியப் பெருந்தகை
பிறந்தநாள் நூற்றொன்று;
பேருவகை தந்தின்று
பிறந்தது! விடிவெள்ளி
கார்உலா வானத்தில்
கண்டதுபோல் களிப்புவெள்ளம்
ஊரெல்லாம் வளர்ந்தது;
உள்ளமெலாம் கிளர்ந்தது!

நினைக்கையில் அவரைத்தான்
நெஞ்சிலே எழுகின்ற
முனைப்புள்ள எண்ணங்கள்;
முழுவதும் வண்ணங்கள்!
வனைகின்ற கருத்துகள்;
வளமான குருத்துகள்!
தினையளவும் தளராத
திண்ணிய வீச்சுகள்!
புனைவல்ல கழகமே
பொழுதெலாம் மூச்சுகள்!
சுனையூற்று நீர்போலத்
தூயதமிழ்ப் பேச்சுகள்!
வினையாற்றத் தூண்டிடும்
வெந்தழல் தீத்துகள்!
அனைத்துமே கழகத்தின்
ஆக்கமுறும் போத்துகள்!

அண்ணா மலைக்கழகம்
ஆய்ந்துதமிழ் பயிலுகையில்
அண்ணாவைக் கண்டவர்;
அவர்தலைவர் என்றவர்பின்
நண்ணியவர்; திராவிட
நாடொன்று தேவையென
எண்ணியவர்; சீர்திருத்தம்
இனமானம் எழுப்பியவர்;
கண்ணியம் கடமையுடன்
கட்டுப்பாடு எனமூன்றும்
கொண்டிடுக என அண்ணா
கூறியதை ஏற்றவர்;
கண்டன்று பச்சையப்பன்
கல்லூரி ஆசிரியர்
மண்டுபுகழ் பெற்றவர்!
மாணவர்போல் மக்களுக்குத்
தொண்டாற்ற வேண்டுமென
அண்ணாவின் சொல்கேட்டுத்
திண்டாட்ட அரசியலில்
திகழ்ந்தவர்; முழுநேரம்
விண்டுபல மேடைகளில்
விளக்கங்கள் பொழிந்தவர்!

கண்டபல போராட்டம்
கடுஞ்சிறை எலாம்கடந்து
கொண்டபல பதவிகளால்
கோடிகள் சேர்க்காமல்
துண்டுதறிச் செல்கின்ற
தூயவராய்த் துலங்கியவர்;
வண்டமிழ்த்தேன் வடித்தவர்!
வாரிசாய்த் தளபதியே
எண்டிசையும் போற்றிட
இலகுவார் என்றவர்
திண்ணிய கருத்துடன்
திகழ்ந்தபே ராசிரியர்
எண்ணியது சரியாக
இன்றுண்மை ஆயிற்று!

அண்ணா மதித்திருந்த
அறிவுசால் பேராசிரியர்
எண்ணாமல் ஏதொன்றும்
எப்போதும் செய்ததில்லை!
கண்ணறச் சொல்வதில்
கனிவென்றும்
குறைந்ததில்லை!
புண்படுவார் பிறரென்று
பொய்யுரைக்க முனைந்ததில்லை;
பண்பட்ட மொழியன்றிப்
பகருதல் கேட்டதில்லை;
நண்பராய், நெருக்கமாய்
நாவலர் இருந்தபோதும்
கண்கெட்டுப் போனவழி
கால்வைக்க விழைந்ததில்லை!
அண்டியே கீழோரின்
அடிவீழ்ந்தோர் ஆயிரம்
கொண்டாலும் சிறப்பில்லை;
கொள்கையர்க்கோ
இறப்பில்லை!
பண்பாளர்க்கு என்றுமே
பதவிதான் பெரிதுமில்லை!

தொண்டொன்றே வாழ்வென்று
துலங்கிய பின்னாலே
தண்டுன்றும் காலத்தும்
தறுகண்மை இழப்பதில்லை!
வண்டாகப் பறந்துபெரும்
வளம்சேர்த்துப் பிழைப்பதிலே
உண்டாகும் நிலைமையை
உயர்ந்தவர் மதிப்பதில்லை!

நீரோட்டம் போலவே
நிற்காமல் ஒருகட்சி,
பேரோட்டம் ஓடுபவர்
பெரும்பயன் தேடுபவர்
பாரெட்டும் கிடக்கையில்
பரத்தையாய் நடக்கையில்
ஈரோட்டுப் பட்டறையில்
இனக்காஞ்சிப் பாசறையில்
மார்தட்டி வளர்ந்தவர்
மானமாய்க் கிளர்ந்தவர்
நேராக நிமிர்ந்தவர்
நீசரை உமிழ்ந்தவர்
போராட்டம் கண்டவர்
புன்சிரிப்பைக் கொண்டவர்
தேரோட்டம் சென்றவர்
செம்மலாய் நின்றவர்
பேராசிரியர் என்றே
பேசிடும் உலகுநன்றே!

காலங்கள் எத்தனை
கடந்துதான் போயினும்
நீலவான் கழகத்தின்
நெருப்புநிலா ஆனவர்;
ஆலமரம் போல்படர்ந்த
அண்ணாவின் கழகந்தான்
ஞாலத்தில் நிலைத்திட
நல்லாட்சி புரிந்திட,
சாலவே உழைத்துழைத்துத்
தழைக்கவைத்த கலைஞரின்
வாலறிவு நண்பராய்
வலமிருந்து நடந்தவர்!
நூலறிவு மிக்கவர்;
நோக்கழகு மிளிர்ந்தவர்,
மேலவர்பே ராசிரியர்
மேன்மைமிகு பெருமகனார்!

செந்தமிழ் செந்தமிழர்
செந்தமிழ் நாட்டிற்கு
எந்தவிதம் எதிர்ப்புகள்
எழுந்தாலும் எரிமலையை
முந்துதல்போல் கிளர்ந்தெழுந்து
முறித்தவர்! சமற்கிருதம்
இந்திமொழி யாவுமே
இனம்,மொழி எதிர்காலச்
சந்ததிகள் அழிப்பதற்குத்
தயங்காமல் தடம்போட்டுத்
தந்திரமாய் வருபவை;
தாழ்வுகளே தருபவை!
சிந்தியேனும் குருதியை,
சிறைகளை நிரப்பியேனும்
சிந்துகள் பாடியே
தீமைகளை வெல்வதுதான்
நந்தமிழர் கடமையென
நாளுமே போராட
முந்தியவர்;கழகத்தில்
முன்னின்று முழங்கியவர்!
அந்திவரை பொதுச்செயலர்
ஆனபே ராசிரியர்
இந்தநாள் பிறந்தநாள்!
இனியநாள்; எழுச்சிநாள்!

எழுத்தாலும் பேச்சாலும்
இலக்கணம்போல் செயலாலும்
அழுத்தமாய்க் கருத்துகள்
அயராமல் பதித்தவர்!
செழித்திருந்த உயர்குலச்
செம்மலாய்ப் பிறந்திருந்தும்
புழுத்திருந்த சமுதாயம்
பொலிவுற்று முன்னேற
உழுதுழுது வாழ்வெல்லாம்
உழைத்தவர்; அண்ணாவின்
விழுதாகத் தோன்றியே
மரமாக விளங்கியவர்!

பழுதாக எண்ணுவதோ
பாழாகச் செய்வதோ
ஒழுகாமல் உயர்ந்தவர்;
உரிமையை உவந்தவர்;
மெழுகாக உருகியவர்;
மேன்மையாய் ஒளிர்ந்தவர்;
கழுகாகக் கொத்துகிற
கரவான அரசியலில்
வழுவாகப் போகாமல்
வல்லோர்க்குப் பணியாமல்
தழலாகச் சிலநேரம்
தண்தென்றல் பலநேரம்
நிழல்தந்து வாழ்ந்தவர்!
நிலையான கழகத்தில்
குழுவின்றி வளர்ந்தவர்;
குரிசிலாய் மலர்ந்தவர்!
எழுச்சிப்பே ராசிரியர்
இனியநற் பிறந்தநாள்
வழுத்துவோம்; வையமுள்ள
வரைஅவர் வாழ்கவே!

மண்ணுலகம் புகழ்ந்தவர்;
மாண்புற்றுத் திகழ்ந்தவர்
கண்ணான பிறந்தநாள்;
கழகத்தின் சிறந்தநாள்;
எண்ணிலாது எழுகவே;
இனமானம் வளர்கவே!
வண்டூதும் பூக்களை
வாரிவாரித் தூவியே
கொண்டாடிப் போற்றுவோம்;
கொள்கையின் கோமான்செய்
தொண்டுகள் என்றென்றும்
தொடருவோம்; வாழ்த்துவோம்.